தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் 3,087 பட்டதாரி ஆசிரியர்கள் அனைவரும் முறையாக நியமனம் செய்யப்பட்ட பின்னரே, மேற்குறிப்பிட்ட விவரங்களை இயக்குநரால் அனுப்ப முடியும். அவ்விவரங்கள் அரசுக்கு கிடைத்த உடன் 1—4—1970 முதல் 3—3—1973 வரை அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் தற்காலிக நியமனம் செய்யப்பட்டிருக்கும் பட்டதாரி ஆசிரியர்களில் எஞ்சியுள்ளோர்களின் பணியை வரன் முறைப்படுத்துவதற்கு தேர்வு ஆணைக் குழுவின் ஒப்புதலைப் பெற அரசு தேர்வு ஆணைக் குழுவைக் கலந்து ஆலோசிக்கும்.

விதிகளின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவின் மூலமாகவே அரசு உயர்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர்கள் பதவிக்கு நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இந்தத் தேர்வில் சற்று மாறுபட்ட ஒரு வழி முறையைக் கையாள இருப்பதால் சிறிது தாமதம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும் என்றும் இப்பொருள் துரிதப்படுத்தப்பட்டு அவ்வாசிரியர்களின் தற்காலிகப் பணி கூடிய விரைவில் தேர்வாணைக் குழுவின் ஒப்புதல் பெற்று முறைப்படுத்தப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU V. ISVARMURTI : Mr. Chairman, Sir, what the teachers would like to know is whether their services will be regularised from the date of their first appointment because they have been several times ousted and then reposted.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> தலைவரவர்களே, இது பற்றிய விளக்கங்கள் தெரியவில்லை. ஆனால் ஏற்கெனவே இருக்கிற ஆணைப்படி முறைப்படுத்தப்படும். சிக்கல்கள் இருக்குமானால், தனியாகக் கவனிக்கலாம்.

6. மேலவை விதிக் குழுவின் அறிக்கை

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> தலைவரவர்களே, இவ்வவையினால் அமைக்கப்பட்ட மேலவை விதிக் குழுவின் பரிந்துரைகள் கொண்ட அறிக்கையினைக் குழுவின் சார்பில் இம்மன்றத்தின் முன் வைக்கின்றேன். இக் குழு தங்களது தலைமையில் எவ்வளவு சீரிய முறையில் இயங்கியது என்பதற்கு இவ்வறிக்கையும், குழுவின் அன்றாட நடவடிக்கைக் குறிப்புகளுமே சான்றாகும். மேலவை விதிகளின் தமிழாக்கத்திலேயே குழு தன் முழு கவனத்தையும் செலுத்தியது. அவ்வாறு விதிகளை ஆயும்போது, மிகவும் தேவைப்பட்டதெனக் கருதப்பட்ட சில மாற்றங்களை, குழுவின் அறிக்கையில் 7, 8-வது பத்திகளில் கண்டுள்ளபடி செய்துள்ளது. இக்குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும் மிகுந்த ஆர்வத்துடன் பணிபுரிந்ததன் விளைவாகவே, தமிழாக்கத்தை மிகவும் சீரிய முறையில், தலைவரவர்களே, தங்களது தலைமையில், குழுவினால் செய்ய முடிந்தது. இதைத் தமிழாக்கம் என்று சொல்வதைவிட, விதிகள் தமிழிலேயே இயற்றப்பட்டன என்று சொன்னால் அது மிகையாகாது. விதிகள் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு தனியே கூடிய விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இச்சமயத்தில், தலைவரவர்களே, தங்களது அலுவலகம் ஆர்வத்தோடு குழுவினருக்குத் தேவையான உதவியினை அளித்தது என்பதை நான் சொல்லத் தேவையில்லை. அவர்களது பணியின் விளைவாகவே தமிழாக்கத்தை நல்ல முறையிலும் விரைவாகவும் செய்ய முடிந்தது என்பதையும் சொல்லி அதற்காகப் பெருமைப்படுகிறேன். அவர்களுக்குப் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அறிக்கையை இந்த அவை முன் வைக்கிறேன்.

7. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) 1973-ஆம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 28/73).

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே,

"சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1973-ஆம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன் வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 28/73) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தலைவரவர்களே, மோட்டார் வண்டிகள் சட்டத்தில் இது இரண்டு திருத்தங்களைக் கொண்டு வருகிறது. ஒரு திருத்தம், எஸ்.டி.ஏ.டி.-யில் பஸ் சொந்தக்காரர்களுக்கு சாதகமோ அல்லது பாதகமோ ஏற்படுகிற போது அவர்கள் உயர் நீதி மன்றத்திற்குப் போகிற வகையில் ஒரு திருத்தத்தை ஏற்கெனவே இந்தச் சட்ட மன்றத்தின் மூலம் நாம் நிறைவேற்றி இந்தச் சட்டத்தில் வகை செய்திருக்கிறோம். அப்படி அவர்கள் உயர் நீதி மன்றத்திற்குப் போகிறபோது, குறிப்பிட்ட கட்டணத்தை வசூல் செய்வதற்கு ஏற்ற வகையில் விதிகளை உருவாக்குவதற்கு, உருவாக்குகிற அந்தப் பிரிவின் கீழ் அதிகாரம் அளிக்கிற வகையில் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இரண்டாவது திருத்தம் ஏற்கெனவே சட்ட மன்ற மேலவையின் மூலம் மோட்டார் வண்டிகள் வாகன சட்டத்தில் 68-எச் என்ற ஒரு செக்ஷனைக் கொண்டு வந்திருக்கிறோம். அதற்குப் பிறகு டெல்லி சர்க்கார், அதே சட்டத்தில் 68-எச். என்ற ஒரு பிரிவினைக் கொண்டு வந்து விட்டார்கள். ஆகவே இந்தச் சட்டப் பிரிவை 68-எச். என்று போடுவதற்குப் பதிலாக 68-எச். எச். என்று மாற்றிக்கொள்ள வகை செய்கிறோம். ஆகையினால் இந்தச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1973-ஆம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 28/73) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

---

* 129-ஆம் பக்கத்தில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.